DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDL. DIST. & SESSIONS JUDGE, MADURAI

**S.C 422/2017 P.W.1**

DEPOSITION OF WITNESS FOR: PROSECUTION DEFENCE COURT

NAME : திரு. பாண்டிச்சாமி

FATHER'S NAME :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.08.2021**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

தற்போது நான் எஸ்,எஸ் காவல் நிலையத்தில் சட்ட ஒழுங்கு பிரிவில் சிறப்பு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தெப்பக்குளம் போக்குவரத்து காவல் பிரிவில் பணியாற்றி வந்த போது அயல் பணி பிரிவாக மதுரை மாநகர் காவல் நுண்ணறிவு பிரிவு Ausio Visual Technician பிரிவில் Videographer ஆக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரிகள் மற்றும் இறந்த வீரக்குமாரை தெரியும். சம்பவ தினமான 03.01.2016 தேதியன்று வீரபாண்டிய கட்டபொம்மனுடைய 257 வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை பெரியார் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைக்கு அருகில் உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் காலை 08.00 முதல் அரசு வீடியோ உபகரணம் மூலம் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைக்கு மாலை அணிவிக்க வருபவர்களை வீடியோ மூலம் படம் எடுத்துக் கொண்டிருந்தேன், அப்போது மதியம் சுமார் 13.15 மணிக்கு TN-65 E-2325 என்ற பதிவெண் கொண்ட டாடா சுமோ காரில் காவல் ஆணையரின் தடை உத்தரவு அமலில் இருக்கும் பொழுது பழந்தமிழர் மக்கள் கட்சி மாநில பொதுச்செயலாளர் மற்றும் பலரும் ஒன்றுகூடி சட்டவிரோதமாக வந்தவர்களை வீடியோ எடுத்த போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு

தெரிந்து கொண்ட ஆஜர் எதிரிகள் மற்றும் வீரக்குமார் ஆகியோர்களில் ராஜு மகன் கணேசன், ஜெயக்கொடி மகன் நாராயணன், ஆறுமுகம் மகன் வீரக்குமார் என்ற மதுரை வீரப்போயன் ஆகிய மூன்று பேரும் அவர்களுடன் வந்தவர்களும் நாங்க வந்த வண்டிய ஏன்டா வீடியோ எடுக்குற, எந்த பத்திரிக காரன்டா என்று கேட்டார்கள். அதற்கு நான் பத்திரிகையாளர் இல்லை., போலிஸ் வீடியோகிராபர், உங்கள் வேலையை பாருங்கள் என்று கூறினேன். அதற்கு எதிரிகள் மூவரும் உடன் இருந்தவர்களும் சேர்ந்து என்னை பார்த்து போலிஸ் தேவடியா மகனே நாங்கள் வந்த வண்டியை ஏன்டா வீடியோ எடுக்குற என்று கூறி வலது கன்னத்திலும் உடலிலும் கையால் என்னை தாக்கினர். நான் கையில் வைத்திருந்த கேமிராவை பிடுங்கி உடைத்தனர். எதிரிகளுடன் வந்த மதுரை வண்டியூர் சங்கர் நகரை சேர்ந்த சின்னச்சாமி மகன் மணிகண்டன், அருப்புக்கோட்டை தாலுகா சூர்நாயக்கன்பட்டியை சேர்ந்த முத்தையா மகன் கந்தசாமி, விருதுநகர் மாவட்டம் செந்நெல்குடி காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்த எர்ணவேல் மகன் சக்திவேல் ஆகிய மூவரும் என்னை ஏன்டா தேவடியா மகனே நாங்கள் வந்த வண்டிய ஏன்டா வீடியோ எடுக்குற போலிஸ் காரங்கள அடிச்சு கைய கால ஒடிங்கடா அப்போது தான் போலிஸ்காரர்களுக்கு பயம் இருக்கும் என்று சொல்லி கீழே கிடந்த கல்லை எடுத்து வீசினார்கள். அப்போது பாதுகாப்பு பணியில் இருந்த சட்டம் ஒழுங்கு உதவி துணை ஆணையர் திரு.கே,பீர்முகமது அவர்களின் வலது கையில் ரத்தக்காயம் ஏற்பட்டது. அவருடன் பணியில் இருந்த போக்குவரத்து பிரிவு உதவி ஆணையர் திரு.திருமலை குமார் அவர்களின் இடது கணுக்காலுக்கு மேல் காயமும் C3 SSI திரு,ரவிச்சந்திரன் என்பவருடைய வலது முன்கையிலும் காயமும் ஏற்பட்டது. அப்போது என்னை பார்த்து இத்தோடு தப்பிச்சு ஓடுங்கடா இல்லைனா எங்க ஆளுங்கலாம் சேர்ந்து உன்னை அடித்து கொலை செய்து விடுவோம் ஓடுடா என்று அடித்து துரத்தினார்கள். அப்போது சிலையின் அருகில் பாதுகாப்பில் இருந்த காவலர்கள் குறைந்தபட்ச பலத்தை உபயோகப்படுத்தி கூட்டத்தை கலைத்தனர். அப்போது கீழே விழுந்து ஓடியவர்களை மடக்கி பிடித்தார்கள். அதில் வீரக்குமார் என்ற மதுரை வீரப்போயன் என்பவர் மட்டும் அவர்களுடன் வந்த நபர்களும் ஓடிவிட்டனர். பிடித்த 5 நபர்களை மட்டும் காவல் நிலைத்திற்கு அழைத்து வந்து உடைந்த கேமராவையும் ஆஜர்படுத்தி என்னை அரசு செய்ய விடாமல் அசிங்கமாக பேசியதாகவும் கைகளாலும்

கல்லாலும் அடித்து அரசுக்கு சொந்தமாக கேமராவை சேதப்படுத்தியதாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி திடீர் நகர் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன்., எனக்கு காயம் பட்டிருந்ததால் என்னை உடனடியாக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் உள்நோயாளியாக வார்டு எண்.99 ல் சிகிச்சை பெற்று வந்தேன். அப்போது சி1 காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். இது சம்பந்தமாக நான் கொடுத்த புகார் அசாஆ 1, எதிரிகள் அடித்து சேதப்படுத்திய கேமரா சாபொ1,. கற்கள் 3 எண்ணிக்கை சாபொ2, எதிரிகள் ஓட்டி வந்த காரை நீதிமன்ற உத்தரவை அடிப்படையில் அதன் உரிமையார் பெற்று சென்றுள்ளனர். அது சாபொ3, இது சம்பந்தமாக என்னை திடீர் நகர் காவல் நிலைய சட்ட ஒழுங்கு காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.